# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT MUNSIF, TENKASI.

O.S.No.415/2021

Deposition of witness for DW1

| | | |
|---|---|---|
| Name | : | பார்வதி |
| Husband's Name | : | பிச்சையா |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | 55 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 24.09.2025.

முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் பிரதிவாதி. என்னுடைய முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இந்த நிரூபண வாக்குமூலம் என்னுடைய தகவலின் அடிப்படையிலேயே தயார் செய்யப்பட்டுள்ளது. நிரூபண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து உண்மை என உறுதி கூறி கையொப்பம் செய்துள்ளேன்.

1. 10.01.1975 தேதியில் பிராது 1ம் தபசில் சொத்தை பொறுத்து 2ம் பிரதிவாதி பெயருக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட உரவினியோக அட்டை அசல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(மேற்படி ஆவணம் வாதி தரப்பில் Material Alteration உள்ளதாக ஆட்சேபனை செய்யப்பட்டது, மேற்படி ஆட்சேபனை வழக்கின்போது பரிசீலிக்கப்படும்.)

2. 24.01.2006 தேதியில் 2ம் பிரதிவாதி மற்றும் சின்ன விருத்தேவர் ஆகியோர்கள் சேர்ந்து முத்துக்குமாருக்கு எழுதிக்கொடுத்த பவர் பத்திரம் சார்பதிவாளர் நகல் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 13.02.2006 தேதியில் முத்துக்குமார் 4ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சார்பதிவாளர் நகல் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 17.10.2006 தேதியில் 4ம் பிரதிவாதி தனது மகளான 5ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துள்ள ஏற்பாடு ஆவணம் சார்பதிவாளர் நகல் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(பி.வா.சா.ஆ.2 முதல் 4 ஆவணங்களின் அசல் ஆவணம் பிரதிவாதி வசம் இருந்தும் தாக்கல் செய்யாததால் மேற்படி ஆவணங்கள் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணையின் தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்/-K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.